


தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 33

# மார்ச் மாதத்துக்கு முன் மாகாண சபைத் தேர்தல்



அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல் முறையில் திருத்தங்களை மேற் கொள்வது தொடர்பான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்படும்.

இதன்மூலம் மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு பொருத் தமான சூழல் உருவாக்கப்படும் என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (03)

## வட மாகாண ஆளுநராக ஜீவன் தியாகராஜா பதவிப்பிரமாணம்



வட மாகாண புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட ஜீவன் தியாக ராஜா நேற்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அவர் இவ்வாறு பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக கடமையாற்றிய ஜீவன் தியாகராஜா. தனது பதவியை இராஜினாமா செய்த நிலையில் வட மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சுமார் 70,000 பேர் இதுவரை தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை



தற்போது கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தொடர்பாக கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட மட்டத்தில் தரவுகள் சேகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (03)

## சமையல் எரிவாயு விலைகள் குறைப்பு




லிட்ரோ நிறுவனம் தனது சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலைகளை குறைக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. அதன்படி, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலி ண்டரின் விலை 75 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. (03)

## பெங்களூரை வீழ்த்தி முன்னேறியது கொல்கத்தா

ஐ.பி.எல்.2021 கிரிக்கெட் தொடரின் எலிமினேட்டர் சுற்று சார்ஜாவில் நடைபெற்றது. இதில் ரோயல் செலஞ்சர்ஸ் பெங்க ளூர், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் மோதின. டொஸ் வென்ற பெங்களூர் கெப்டன் விராட் கோலி பெட்டிங் தேர்வு செய்தார். அதன்படி, முதலில் ஆடிய பெங்களூர் அணி நிர்ணயிக் கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 138 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக விராட் கோலி 39 ரன்னும், தேவ்தத் படிக்கல் 21 ரன்னும் எடுத்தனர். (03)



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,வவுனியா.

## எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலும், தமிழ் மக்களும்

நீண்ட இழுபறிகளுக்கு மத்தியில் எதிர்வரும் காலங்களில் மாகாண சபைகளுக்கானத் தேர்தலை நடாத்த வேண்டிய நிலையில் தற்போதைய அரசாங்கம் உள்ளது. அரசின் மீதான அதிருப்திகள் மக்கள் மத்தியில் அதிகரித்த வண்ணம் உள்ள இச் சூழலில் அரசின் பலத்தை பரீட்சித்துப் பார்க்கவேண்டிய தேவையும் தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவுக்கு எழுந்துள்ளது. கொவிட் வைரசின் பரவலால் முழுமையாகப் பாதிப்படைந்துள்ள இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் வளர்ச்சிப் பாதைநோக்கி கொண்டுசெல்லவேண்டிய நிலையும். நாட்டில் திடீரென அதிகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பொருட்களின் விலையினை மிக விரைவில் மக்களுக்கு ஏற்ப நியாயமான வகையில் விலையினை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பும் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அதற்குரிய வேலைத்திட்டங்களை மிக விரைவில் துரிதகதியில் ஆரம்பிக்கவேண்டும். வெறுமனே கடந்த கால அரசாங்கங்களை குற்றஞ்சுமத்தியே காலத்தை இழுத்தடிக்காமல் செயற்பாடுகளில் கவனமெடுக்க வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது.

இந்த நிலையில் தான் மிக விரைவில் மாகாண சபைகளுக்கானத் தேர்தல் நடாத்தப்பட வாய்ப்பு இருப்பதாக தெற்கின் செய்திகள் கட்டியம் கூறுகின்றன. அரச தரப்பினரே இதுகுறித்து வாய்திறக்க ஆரம்பித்துள்ளனர். இந்த சூழலில் தான் ஜனாதிபதி புதிய அரசியலமைப்பு பற்றி வாய்திறந்துள்ளார். ஆகவே ஜனாதிபதி அடுத்த தேர்தலை எதிர்கொள்ள தன்னைத் தயார்ப்படுத்திவிட்டார் என்று புரிகிறது.

எது எவ்வாறாயினும் எதிர்வரும் தேர்தலை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டிருக்கும் வடகிழக்குத் தமிழ்க் கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள். அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் திரைமறைவில் நடைபெறாமல் இல்லை. ஏற்கனவே அமைந்த வடமாகாண சபை காலம் நிறைவில் ஊழல் நிறைந்த சபை என முத்திரை குத்தப்பட்டமை அனைவருக்கும் தெரிந்த விடயம். அதனது செயற்பாடுகள் குறித்து கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன. செய்யவேண்டிய கடமைகள் ஏராளம் இருந்தும் நிதி முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கள் எழுந்தது.

எனினும் இம்முறை, கடந்த தவறுகளில் இருந்து பாடங் கற்றுக்கொண்டு தமிழ் மக்கள் சிந்தித்து எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். இம்முறையும் தமிழ் மக்களது வாக்குகளை சிதைக்க சுயேட்சைகள் பல கோணங்களில் களமிறக்கப்படுவார்கள். அரசின் ஒட்டுண்ணிகள் குறித்து தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். வடமாகாண சபை என்பது தமிழ் மக்களுக்குரியது என்பதை நினைவிற்கொண்டு தமிழ் மக்கள் உணர்ந்து உங்களது வாக்குரிமையைப் பயன்படுத்தவேண்டும்.

## மாத்தளை மாவட்டத்தில் 670 வீதிகள் அமைக்க முடிவு




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை திட்டத்திற்கு அமைவாக 100,000 கி.மீ நீள வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பாலபத்வல - கலேவெல (பி -346) வீதியை விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும் பணி ஆளும் தரப்பு பிரதம கொறடா, நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் தலைமையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

30.75 கிலோ மீட்டர் நீள பாலபத்வல - கலேவெல (பி - 346) வீதியை விஸ்தரித்து அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. 12 மாதங்களுக்குள் ரூ.3,552 மில்லியன் செலவில் இத்திட்டம் நிறைவு செய்யப்படும். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்த வீதி விஸ்த்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இந்த வீதி 30 கிலோ மீட்டரை விட நீளமானது. கடந்த ஐந்து வருட நல்லாட்சியின் போது இந்த நாட்டில் வீதிகள் எதுவும் அமைக்கப்படவில்லை. கடந்த அரசாங்கம் நிர்மாணிக்கப்பட்ட வீதிகளை பாதுகாக்க கூட நடவடிக்கை எடுக்கவில்லை. ஜனக பண்டார தென்னகோன் உட்பட மாவட்ட அரசியல் தலைமைகளுக்கு இந்த மாவட்டத்திலுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர்.

இந்த வீதியை விரிவுபடுத்தி மேம்படுத்தும்படி என்னிடம் கோரப்பட்டது. இந்த வீதியை அபிவிருத்தி செய்வதற்காக நெடுஞ்சாலை அமைச்சு ரூ.35,000 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. நாட்டில் அபிவிருத்தி பணிகள் இடம்பெறவில்லை என பலர் குற்றம் சாட்டுகிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது நிறைய சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கடந்த அரசாங்கத்தால் அழிக்கப்பட்ட பொருளாதாரமே எமக்குக் கிடைத்தது. கடந்த அரசாங்கம் செய்த திருட்டுகளால் எங்கள் பொருளாதாரம் சரிந்தது. மத்திய வங்கி கொள்ளையடிக்கப்பட்டது. கண்டிவரை நெடுஞ்சாலை அமைக்கப்படும் என்று கூறப்பட்டாலும், அது நிர்மாணிக்கப்படவில்லை. தம்புள்ளைக்கு நெடுஞ்சாலை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அதுவும் நடக்கவில்லை. மாத்தளை மாவட்டத்தில் மட்டும் 670 வீதிகளை நிர்மாணிக்க முடிவு செய்துள்ளோம்.

நீங்கள் எதிர்பார்க்கும் நாங்கள் நாட்டை உருவாக்குவோம் என்று மக்களிடம் நாம் பொறுப்புடன் கூறுகிறோம். எங்களுக்கு தற்போது சில சிறிய தற்காலிக பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பால், எரிவாயு, நெல் விலை போன்ற தற்காலிக பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த சிக்கல்கள் அனைத்தும் கோவிட் நெருக்கடியின் காரணமாக கருப்பு சந்தைக்காரர்களால் உருவாக்கப்பட்டவை. இவை அனைத்தும் தற்காலிக பிரச்சினைகள். இந்த தற்காலிக பிரச்சினைகளின் மூலம் அரசாங்கத்தை கவிழ்க்க முடியும் என்று எதிர்க்கட்சிகள் நினைத்தால், அது ஒரு கனவு மாத்திரமே. இந்த நாட்டின் இதயமாக இருக்கும் மத்திய வங்கியை கொள்ளையடித்தவர்களை நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

மழையில் நனையும் போது, மத்திய வங்கியைக் கொள்ளையடித்தவர்கள் தான் இப்படி நனைகிறார்கள் என்று மக்களுக்குத் தெரியும். அவர்களின் இரத்தத்தில் மத்திய வங்கியில் இருந்து திருடிய பணமே உள்ளது. இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய நாங்கள் இடமளிக்கவில்லை. அதை நிலையாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஜனாதிபதியின் சரியான முடிவுகளால், சரிந்த பொருளாதாரம் இரண்டு மாத குறுகிய காலத்தில் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது. எளிமையான வரிவிதிப்பு முறையினால் தான் இந்த நாட்டின் பொருளாதாரம் இந்த கோவிட் தொற்றுநோய்க்கு மத்தியிலும் தப்பியுள்ளது. இந்த நாடு நிச்சயம் வளர்ச்சி அடையும் என்று நாங்கள் மக்களிடம் கூறுகிறோம். எதிர்வரும் தேர்தலில் கண்டிப்பாக நாம் வெற்றி பெறுவோம் என தெரிவித்துள்ளார்.

**நாட்டில் மேலும் 23 கொவிட் மரணங்கள் நேற்று (11.10.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,354 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 681 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 527,064 ஆக அதிகரித்துள்ளது.**

## இன்றும் மழையுடன் கூடிய காலநிலை - மக்களே அவதானம்

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வட மத்திய மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வட மத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## மார்ச் மாதத்துக்கு...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தில் நேற்று (11) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இந்த கருத்துக்களை வெளியிட்டார்.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவதைப் போன்று வெளிநாட்டு சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து செயற்படப்போவதில்லை என அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(அரசாங்க தகவல் திணைக்களம்)

## சமையல் எரிவாயு...

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2,675 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலையை 30 ரூபாவாலும், 2.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலையை 14 ரூபாவாலும் குறைக்க அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, 5 கிலோ கிராம் சிலிண்டரின் புதிய விலை 1,071 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 2.5 கிலோ கிராம் சிலிண்டரின் புதிய விலை 506 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

## சுமார் 70,000...

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத இந்த வயதினர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கிய அறிக்கையை நேற்றுடன் அமைச்சுக்கு சமர்ப்பிக்குமாறு மாவட்ட செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, 60 வயதுக்கு மேற்பட்ட சமார் 70,000 பேர் இதுவரையிலும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பது பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, இதுவரையிலும் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்கள் இருப்பின், அதுதொடர்பாக கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்குமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சு பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளது.
(அரசாங்க தகவல் திணைக்களம்)

## பெங்களூரை வீழ்த்தி...

கொல்கத்தா அணி சார்பில் சுனில் நரைன் 4 விக்கெட்டும், பெர்குசன் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 139 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது. கில் 29 ரன்னும், வெங்கடேஷ் அய்யர் 26 ரன்னும் எடுத்து அவுட்டாகினர். ராகுல் திரிபாதி 6 ரன், நிதிஷ் ராணா 23 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். சுனில் நரைன் 26 ரன்கள் எடுத்து அவுட்டானார். தினேஷ் கார்த்திக் 10 ரன்னில் வெளியேறினார்.

இறுதியில், கொல்கத்தா அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வெற்றி பெற்றது. இதன்மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் குவாலிபையர் 2 சுற்றுக்கு முன்னேறியது. **[அப்துல் ஜெப்பார் அப்துல்லா]**

## ஆசிரியர் - அதிபர்கள் தொழிற்சங்கங்கள் - பிரதமருக்கு இடையிலான சந்திப்பு

வேதன முரண்பாடு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஆசிரியர் - அதிபர்கள் தொழிற்சங்கங்களுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இதற்கமைய அலரிமாளிகையில் இன்று (12) மதியம் 12 மணியளவில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அத்துடன் ஆசிரியர் - அதிபர்களின் வேதன முரண்பாடு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபக்குழுவின் உறுப்பினர்களும் இன்றைய சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வேதன முரண்பாடு உள்ளிட்ட விடயங்களுக்குத் தீர்வு கோரி ஆசிரியர் - அதிபர்கள் 3 மாத காலமாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலையகத்தில் அடை மழை - வான் கதவுகள் திறப்பு

**(நோட்டன் பிரிட்ஜ் நிருபர் எம்.கிருஸ்ணா)**

மலையகத்தில் தொடரும் மழை வானிலையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதுடன் நான்கு நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மஸ்கெலியா மவுசாகலை நீர்த்தேக்கத்தில் மூன்று வான் கதவுகளும், லக்ஷபான நீர்த்தேக்கத்தில் மூன்று வான் கதவுகளும் கெனியன் நீர்த்தேக்கத்தில் இரண்டு வான்கதவுகளும் நேற்று காலை முதல் திறந்து விடப்பட்டுள்ளது.

மேலும் நோட்டன் விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தில் நீர் நிரம்பி வழிவதுடன் காசல்றி நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளது. மலையகத்தில் அடை மழை பெய்து வருகின்றமையினால் நீரேந்து பகுதியில் வாழும் கரையோர மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.





## ஹபரண - குருநாகல் புகையிரத வீதியை நிர்மாணிக்கும் பணிகள் விரைவில்



ஹபரண தொடக்கம் குருநாகல் வரையிலான புகையிரத வீதியை நிர்மாணிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். இதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புகையிரத பாதை அமைக்கப்பட்டபின், பயணிகளுக்கு அதிகமான வசதி வாய்ப்புக்கள் கிடைக்கவுள்ளதுடன், தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துடனான தொடர்பும் அதிகரிக்கும். இப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் தமது மரக்கறி உற்பத்தி பொருட்களை இலகுவாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்யும் வாய்ப்பும் இதன் மூலம் கிடைக்கவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொவிட் தொற்றில் இருந்து மீண்டு வர பல தசாப்தங்கள் செல்லலாம்



கொவிட் பரவலை தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நீக்குவதன் ஊடாக வைரஸ் பரவல் வேகமாக அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விஷேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இன்னும் அவதானமான நிலைமையில் இருந்து மக்கள் மீளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். சாதாரணமான நிலைமைக்கு மீண்டும் திரும்ப முடியும் என்பதை தன்னால் எதிர்ப்பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றுக்கு முன்னாள் உள்ள பழைய நிலைமைக்கு செல்லகூடியதற்கான வாய்ப்பு எந்த விதத்திலும் இல்லை எனவும் புதிய சாதாரண முறையை நோக்கியே பயணிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த கொவிட் தொற்றில் இருந்து மீண்டு வருவதற்கு பல தசாப்தங்கள் கூட செல்லலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## பொருளாதாரத்துக்கான நோபல் 3 அமெரிக்க நிபுணர்கள் தேர்வு



பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை, அமெரிக்க பல்கலைகளில் பணியாற்றும் மூன்று பொருளாதார நிபுணர்கள் பகிர்ந்து கொள்கின்றனர். ஐரோப்பிய நாடான ஸ்வீடனைச் சேர்ந்த விஞ்ஞானி ஆல்பிரட் நோபல் விருப்பப்படி, மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதிக்கான நோபல் பரிசுகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. அதே நேரத்தில் அவரது நினைவாக, பொருளாதாரத்துக்கான நோபல் பரிசும் வழங்கப்படுகிறது. ஏற்கனவே மற்ற துறைகளுக்கான பரிசுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு பெறுவோரின் பெயர்கள் நேற்று அறிவிக்கப்பட்டன.

கனடாவைச் சேர்ந்த கலிபோர்னியா பல்கலை பேராசிரியர் டேவிட் கார்ட், இஸ்ரேலை பூர்வீகமாக உடைய மசாசூட்டர்ஸ் தொழில்நுட்ப மைய பேராசிரியர் ஜோஷூவா ஆங்கிரிஸ்ட், நெதர்லாந்தை பூர்வீகமாக உடைய ஸ்டான்போர்ட் பல்கலை பேராசிரியர் குயிடோ இம்பென்ஸ் ஆகியோர் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை பகிர்ந்து கொள்கின்றனர்.

இதில் பரிசுத் தொகையில் 50 சதவீதத்தை, டேவிட் கார்ட் பெறுவார். மீதமுள்ள 50 சதவீதத்தை மற்ற இருவரும் பகிர்ந்து கொள்வர். குறைந்தபட்ச ஊதியம், புலம் பெயர்தல், கல்வி ஆகியவற்றில் தொழிலாளர் சந்தை எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது தொடர்பான ஆய்வுக்காக, இவர்கள் நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தேர்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## உள்ளாட்சி தேர்தல்: ஓட்டு எண்ணிக்கை துவக்கம்

ஒன்பது மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தலில் பதிவான ஓட்டு எண்ணிக்கை, 74 மையங்களில், நேற்று முதல் பலத்த பாதுகாப்புடன் நடந்து வருகிறது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்துார், ராணிப்பேட்டை, திருநெல்வேலி, தென்காசி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய, ஒன்பது மாவட்டங்களில், இரண்டு கட்டங்களாக, 6 மற்றும் 9ம் திகதிகளில், ஊரக உள்ளாட்சி தேர்தல் நடந்தது.

மொத்தம், 140 மாவட்ட கவுன்சிலர், 1,381 ஒன்றிய கவுன்சிலர், 2,901 ஊராட்சி தலைவர், 22 ஆயிரத்து 581 ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவிகளுக்கு தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு உள்ளது. இதேபோல, 28 மாவட்டங்களில் காலியாக இருந்த 789 பதவிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. பல பதவிகளுக்கு போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.



இத்தேர்தலில், 41 ஆயிரத்து 500 ஓட்டுப் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. மூன்றடுக்கு பொலீஸ் பாதுகாப்பில் 74 ஓட்டு எண்ணும் மையங்களில், அவை வைக்கப்பட்டு உள்ளன. நேற்று காலை 8:00 மணிக்கு ஓட்டு எண்ணிக்கை துவங்கியது. உயர் நீதிமன்ற உத்தரவுப்படி ஓட்டு எண்ணிக்கை மையங்களின் உள்ளே மற்றும் வெளியே, 'சிசிடிவி கேமரா' வாயிலாக கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. பாதுகாப்பு பணியில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலீசார் ஈடுபட்டு உள்ளனர்.

## ஜேர்மனியின் புதிய அறிவிப்பு

கொரோனா தொற்று பரிசோதனையானது அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படமாட்டாது என ஜேர்மனி அரசாங்கம் தெரிவித்துள்ளது. உலகில் பல்வேறு நாடுகள் மக்களுக்கு இலவசமாக கொரோனா பரிசோதனையை செய்வதற்காக நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் ஜேர்மனி அரசாங்கம் கொரோனா பரிசோதனை அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படமாட்டாது என அறிவித்துள்ளது. குறிப்பாக மக்கள் அனைவரும் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஜேர்மனி மக்கள் இனிமேல் ஆன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமெனில் கட்டணம் செலுத்த வேண்டும். மற்ற நாடுகளில் உள்ளது போல உணவகங்கள் முதலான பொது இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் கொரோனா பரிசோதனை செய்ததில் எதிர்மறையான முடிவு வந்த சான்றிதழை சான்றாக காட்ட வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதிலும் சிலர் தடுப்பூசி பெறுவதற்கு பதிலாக இலவச பரிசோதனைகள் செய்து தொற்று இல்லை என்பதற்கான சான்றிதழை ஆதாரமாக காட்டி வருகின்றனர். ஆனால் தற்போது இந்த முடிவு கொண்டு வரப்பட்டதால் கொரோனா சான்றிதழ் வாங்குவதற்கு கண்டிப்பாக கட்டணம் செலுத்த வேண்டும் என்ற சூழல் உருவாகியுள்ளது.

இதேவேளை 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், மருத்துவ காரணங்களுக்காக கொரோனா தடுப் பூசி செலுத்திக்கொள்ள முடியாதவர்கள் போன்றோருக்கு மட்டும் கொரோனா தொற்று பரிசோதனை இலவசமாக செய்யப்படும். மேலும் 12 முதல் 17 வயது வரை உள்ளவர்கள், கர்ப்பிணி பெண்கள் ஆகியோர் வருகின்ற டிசம்பர் 31 ஆம் திகதி வரை இலவச கொரோனா தொற்று பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இதனை தொடர்ந்து மருத்துவர்கள் மற்றும் சுகாதார துறையினரால் பரிந்துரைக்கப்படுபவர்களும் இலவசமாக பி.சி.ஆர் பரிசோதனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதாவது கொரோனா தொற்றுக்கான அறிகுறி உடையவர்கள் இலவச பி.சி.ஆர் பரிசோதனை செய்துகொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

## குண்டு வெடிப்பில் பத்திரிகையாளர் பலி

பாகிஸ்தானில், ஷாஹித் ஜெக்ரி, 35, என்ற பத்திரிகையாளர், ஒரு தனியார் செய்தி நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார்.

இவர், பலுசிஸ்தான் மாகாணத்தில் ஒரு வேலைக்காக நண்பருடன் காரில் பயணித்தார். அந்த காரை குறி வைத்து பயங்கரவாதிகள் சிலர் கையெறி குண்டை வீசி தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் காரில் இருந்த ஷாஹித் ஜெக்ரியும், அவரது நண்பரும் படுகாயமடைந்தனர்.

பின், அவர்கள் இருவரும் அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

எனினும் பத்திரிகையாளர் ஷாஹித் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே உயிரிழந்துவிட்டார். அவரது நண்பருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த கொடூரமான தாக்குதலுக்கு 'பலுசிஸ்தான் லிபரேஷன் ஆர்மி' என்ற தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

## பாலியல் வழக்கில் தப்பினார் பிரிட்டன் இளவரசர்



பாலியல் புகாரில் சிக்கியுள்ள இளவரசர் ஆன்ட்ரூ, 61, மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது' என, ஐரோப்பிய நாடான பிரிட்டனின் பொலீசார் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரரான ஜெப்ரி எப்ஸ்டின், இளம் சிறுமியரை பிரிட்டனுக்கு கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளதாக பல புகார்கள் உள்ளன. இதற்காக பல நாடுகளில் இருந்து சிறுமியரை கடத்தி வந்து, அவர்களை வளர்த்து, பாலியல் விருந்து நடத்தியுள்ளதாக விசாரணையில் தெரியவந்தது.

கடந்த 2019ல் அவர், நியூயோர்க் சிறையில் தற்கொலை செய்தார். இந்நிலையில் எப்ஸ்டீன் தன்னைக் கடத்திச் சென்றதாகவும், பிரிட்டன் இளவரசர் ஆன்ட்ரூ தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாகவும், அமெரிக்காவைச் சேர்ந்த விர்ஜினா கியூபர் என்ற பெண், நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் துள்ளார். பாலியல் புகாரில் சிக்கியதைத் தொடர்ந்து ஆன்ட்ரூவின் அரசஉரிமைகளை, அவருடைய தாயும், பிரிட்டன் ராணியுமான இரண்டாம் எலிசபெத் பறித்தார்.

இந்நிலையில் எப்ஸ்டீன் மீதான விர்ஜினா கியூபரின் புகார் தொடர்பாக மறு விசாரணை முடிந்துவிட்டதாகவும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை என்றும், பிரிட்டன் பொலீஸ் கூறியுள்ளது.

## தொழிற்சாலை கழிவுகளை அழிக்கும் பக்டீரியா கண்டுபிடிப்பு

உலகம் முழுதும் தொழிற்சாலை கழிவுகள் சுற்றுப்புற சூழலு க்கு மிகப்பெரிய சவாலாக உருவெடுத் துள்ளது. இந்நிலையில் தொழிற் சாலை கழிவுகளை அழிக்கும் பக்டீ ரியா (Bacteria) கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. தொழிற்சாலைகளில் அதிகளவில் செப்பு எனப்படும் தாமிரம் உபயோகிக்கப்படுகின்றது. செப்பு உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் ஒன்றாக சிலி திகழ்கிறது. இங்கு சுரங்கங்களில் இருந்து தாமிரம் அதிகம் எடுக்கப்படுகிறது.

சுற்றுப்புற சூழலுக்கு பெரும் உலோக கழிவுகள் அதிக அளவில் சேர்ந்து கேடு விளைவிக்கிறது. இதனை சீர்படுத்தும் வகையில் சிலியை சேர்ந்த நுண்ணுயிர் ஆய்வாளர் ஒருவர் உலோகத்தை சாப்பிடும் பக்டீரியா மூலம் ஆய்வு மேற்கொண்டார். குறித்த ஆய்வு வெற்றியடைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அன்டோஃபகஸ்டா என்ற தொழில் நகரத்தில் உள்ள ஆய்வகத்தில், 33 வயதான நுண்ணுயிர் ஆய்வாளர் நாடாக் ரியல்ஸ் நுண்ணுயிர்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டு வந்தார். இவர் தாமிரம் பிரித்தெடுத்தலை மேம்படுத்த நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி ஒரு சுரங்க ஆலையில் சோதனைகளை நடத்திக் கொண்டிருந்தார். சுரங்க ஆலையில் குவியும் கழிவுகள் பாரிய பிரச்சினையாக உருவெடுப்பதை உணர்ந்தார். மேலும் அவற்றை சுற்று சூழலுக்கு கேடின்றி அழிக்க வேண்டும் என்ற நோக்கில் ஆய்வில் ஈடுபட்டார்.

இதில் உலோக கழிவுகளை சாப்பிடும் பக்டீரியாக்களை கண்டறிந்தார். ஒரு ஆணி அளவிலான உலோகத்தை பக்டீரியாக்கள் சாப்பிட இரண்டு மாதங்கள் வரை ஆனது. நுண்ணுயிர் ஆய்வாளர் நாடாக் ரியல்ஸ் தொடர்ந்து நடத்திய ஆய்வுகளில் முன்னேற்றம் ஏற்பட்டு மூன்று நாட்களில் ஒரு ஆணி அளவிலான உலோகத்தை காலி செய்ததன் மூலம் இந்த புதிய தொழில் நுட்பத்தை வெற்றிகரமாக செயல்படுத்தலாம் என ஆய்வு முடிவை வெளியிட்டார்.

இந்த பக்டீரியாவால் மனிதர்களுக்கு அல்லது சுற்றுச்சூழலுக்கு எவ்வித தீங்கு விளைவிக்காது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் தாமிரம் அல்லது பிற கனிமங்களின் பெரிய அளவிலான பிரித்தெடுத்தல் பணிகளை சுற்றுப்புற சூழலுக்கு பாதுகாப்பான வகையில் இதன் மூலம் செய்ய முடியும் என ரியல்ஸ் தெரிவித்துள்ளார். மேலும் இந்த தொழில்நுட்பத்திற்கான காப்புரிமைக்கும் விண்ணப்பித்துள்ளார்.